**நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வாளரின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 5.4.4 ஆம் பிரிவு மற்றும் 5.4.8 ஆம் பிரிவு | நிறுவனத்தின் கேட்போர் கூடத்திற்காக ரூபா 3,981,730 ஆன தளபாடங்கள் கொள்வனவு செய்யும் போது ரூபா 915,798 தொகையான முற்பணப் பிணையின் காலத்தை நீடிப்பு செய்யுமாறு நிறுவனம் | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த முற்பணங்களுக்கான பிணையின் காலத்தை நீடிப்பு செய்வதற்கு நிறுவனம் கோரிக்கை விடுத்த போதிலும், அதற்கு பின்னர் அவ்வாறு செய்வதற்கு தேவை ஏற்படாமைக்கு, | முற்பணப் பிணைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அதன் காலத்தை நீட்டிப்பது சரியாக செய்யப்பட வேண்டும் என்பதுடன், செயலாற்றல் பிணையினை |

கோரியிருந்த போதிலும், வழங்குநர் அந்த கால நீடிப்பினை மேற்கொண்டிராததுடன், நிறுவனம் அது தொடர்பில் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், செயலாற்றல் பிணையினால் சான்றழிக்கப்பட்ட பணியினை நிறைவு செய்தல் அல்லது பொருட்களின் விநியோகம் நிறைவு செய்யப்பட்டதும் அல்லது உரிய திகதியிலிருந்து 28 நாட்களின் பின்னர் வரையிலும் செல்லுபடியான போதிலும், பிரதான கேட்போர் கூடத்திற்கான ரூபா 3,981,730 தொகையான தளபாட உபகரணங்கள் மற்றும் ரூபா 5,639,360 தொகையான ஒலிக் கட்டமைப்பு (Audio system) கொள்வனவு செய்யும் போது வழங்குநர்களால், சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் பிணைகளின் செல்லுபடியான காலத்தினை விஞ்சியிருந்த போதிலும், காலம் நீடிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

பெறுகை அந்த சந்தர்ப்பத்தில் தொன்னூறு சதவீதத்திற்கு (90%) மேல் நிறைவு செய்யப்பட்டிருந்த காரணத்தால், அதாவது கொள்வனவு செய்வதற்குரிய உபகரணங்கள் அனைத்தும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், உபகரணங்களை பொருத்துவதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்ட தாமதத்தினை தவிர பெறுகை நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். அவ்வாறே, பெறுகை தாமதத்திற்காக பத்து சதவீதத்திற்கு (10%) உச்ச எல்லையுடனான தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்முதல் தாமதத்திற்கு அதிகபட்ச தாமதமாக பத்து சதவீதத்தினை (10%) வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதான பேட்போர் கூடத்திற்கான தளபாடங்கள் மற்றும் ஒலிக் கட்டமைப்புகளை வாங்கும் போது செயலாற்றல் பிணையின் செல்லுபடியாகும் காலத்தில் குறித்த பணிகள் சுமார் தொன்னூறு சதவீதத்திற்கும் அதிகமா அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதன் போது சில தொழில்நுட்ப சிக்கல்களால் ஏற்படும்

பெற்று காலத்தை நீடிப்பு செய்தல் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| | பிழைகள் காரணமாக ஏற்படும் தாமதங்களும் அதிகபட்சமாக பத்து சதவீத (10%) தாமதக் கட்டணங்களுக்கு உட்பட்டது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,509,743 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,457,220 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 947,477 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹோமாகம, பிடிபனவில் அமைந்துள்ளது10 ஏக்கர் நிலத்தில் வேலி அமைக்க கொள்முதல் செயல்முறையிலிருந்து விலகி நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவு செய்யப்பட்டதுடன், வேலி கட்டும் பணியை தொடங்க முன்பணம் கொடுக்கலாம் என்றாலும் பிணைக் காப்பீடு இல்லாது, மொத்த ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 3,543,744 தொகையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளதுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வேலி அமைக்கப்படவில்லை. அந்த திட்டங்கள் முடங்கியிருந்ததுடன், பணத்தை திரும்பப் பெற நிறுவனம் தவறியிருந்தது. | இலங்கைக்கு தேவையான செயற்கைக்கோள் கண்காணிப்பு செய்மதி தரவுகளை விநியோகிப்பதற்கான உத்தேச திட்டத்திற்கு மேல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்பம். நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஹோமாகம, பிடிபனவில் உள்ள இந்த 10 ஏக்கர் காணி எமது நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டதுடன், காணி தெளிவாக வரையறுக்கப்படாததால், அதனைச் சுற்றி வேலி அமைப்பதற்கான உரிய தொகை, அதனை ஒருங்கிணைத்த | கொள்முதல் செயல்முறையை பின்பற்றி, செலுத்த வேண்டிய தொகையை வசூலிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனமான நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதற்கென வேறு மாற்று நிறுவனங்களை தெரிவு செய்வது கடினமான பணியாக இருந்தமையினால், உரிய வேலி அமைப்பதற்கான சிறந்த முடிவை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்க வேண்டும். எனினும் பின்னர் ஏற்பட்ட சில தொழிநுட்பக் கோளாறுகளாலும் குடியிருப்புவாசிகளின் எதிர்ப்புகளாலும் பல தடவைகள் உரிய இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.எனவே வேலி அமைக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்மொழியப்பட்ட புதிய காணி ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டவுடன், காணிக்கான வேலி அமைப்பதற்கான பணம் மீளளிக்கப்படும். எனவே, தொடர்புடைய கட்டணம் என்பது இராஜாங்க மட்டத்தில் ஒரு சட்டப்பூர்வ அமைப்புக்கு முறையாக செலுத்தப்படும் முறையான கொடுப்பனவு என்பதால் கால தாமதம் ஏற்பட்டாலும் இது பயனுள்ள பரிவர்த்தனை என்பதால் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவுள்ளது. | |
| (ஆ) | நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைத்தொடர்பு கோபுரம் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு குத்தகை அடிப்படையில் | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதவாறு எமது நிறுவனம் மற்றும் TRCSL ஆகியவற்றுக்கு இடையில் 05 வருட செல்லுபடியாகும் ஒப்பந்தம் | நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கோபுரம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

விடப்பட்டுள்ளதுடன், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2022 ஜூலை 31 வரையிலான 05 வருட காலத்திற்கு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க பெற வேண்டிய வருமானத்தில் 2019 ஆகஸ்ட் வரையிலான காலத்திற்குரிய நிலுவைத் தொகை ரூபா 2,292,945 ஆகும். மீளாய்வாண்டு இறுதி வரை நிலுவைத் தொகையை அறவிட தவறியிருந்தது. முறையான பராமரிப்பு திட்டம் செயல்படுத்தப்படாததால், கோபுரம் தற்போது பழுதடைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

கைச்சாத்திடப்பட்ட போதிலும் அதற்கு முன் செல்லுபடியாகும் காலம் முடிவடையும் முன்னர் அதாவது 2019.08.01 அன்று தொடர்ந்தும் குத்தகை ஒப்பந்தத்தின்படி கோபுரம் பயன்படுத்தப்பட மாட்டாது என்று TRCSL எங்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளது. அதன்படி, அதுவரையில் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் வரவேண்டிய வருமானத்திற்கான விலைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூபா 2,292,945.12 ஆகும். குறித்த தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு பலமுறை நினைவூட்டப்பட்டுள்ளது.

இதுவரை அவர்கள் அந்தக் கொடுப்பனவுகளைச் செய்யத் தவறியுள்ளமையால், எமது நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சமிக்ஞை கோபுரம் 25 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானதுடன், தற்போது பயன்பாட்டில் உள்ள தொழில்நுட்பத்தில் இதுபோன்ற கோபுரத்தை குத்தகைக்கு விட வாய்ப்பு குறைவாக உள்“ளதுடன், அத்தகைய ஒப்பந்த முதலீடு பலனளிக்காது என்று வெளிவாரி அங்கத்தவர்களை உள்ளடக்கிய

பொறியியல் குழுவும் பரிந்துரைத்துள்ளது.
அந்த குழுவின் முடிவுரைக்கமைய குறித்த கோபுரத்தை அகற்றவும், அதனுடன் நிலவும் ஆபத்தான சூழ்நிலையை தவிர்க்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.